## 60

## பாகம் 1 (14:1-15:13):

# “நாம் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடாதிருப்போமாக”

## (14:5-13அ)

“கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபடும்போது” என்ற பாடத்தில் நாம், ரோமருக்கு எழுதிய நிருபம் 14ம் அதிகாரத்தின் முதல் பாதியினுடைய படிப்பு ஒன்றைத் தொடங்கினோம். பின் பாதியானது பின்வரும் புத்திமதியுடன் தொடங்குகிறது: “இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக” (வசனம் 13அ). “இப்படியிருக்க” என்பது, பவுல் 1 முதல் 12 வரையிலான வசனங்களில் கூறிய அடிப்படையில் பின்வரும் முடிவு அடையப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது: கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் இனியும் ஒருவர் மற்றவரைக் குற்றவாளிகளென்று தீர்க்கக் கூடாது.

ரோமர் 14ல் பவுல், தீர்ப்பிடுதல் பற்றிக் கூறுவதற்கு அதிகமானவற்றைக் கொண்டிருந்தார். “தீர்ப்பிடுதல்” என்பதற்கான கிரேக்க வினைச்சொல்லான *krino* என்பதன் வடிவங்கள் இந்த அதிகாரத்தில் ஒன்பதுமுறை காணப்படுகிறது. முன்பே குறிப்பிட்டபடி, *krino* என்பது - இன்றைய நாட்களில் “தீர்ப்பிடுதல்” என்ற வினைச்சொல் பயன்படுத்தப்படுவது போலவே - எதிர்மறையாகவும் நேர்மறையாகவும் பயன்படுத்தப்பட முடியும். 14ம் அதிகாரத்தில் *krino* என்பது முதன்மையாக ஒரு எதிர்மறை அர்த்தத்தையே கொண்டுள்ளது மற்றும் இது “தீர்ப்பிடுதல்” என்றே பொதுவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (வசனங்கள் 3, 4, 10, 13அ). இந்த அதிகாரத்தின் முடிவில், இது “குற்றவாளியாக்குதல்” மற்றும் “ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுதல்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (வசனங்கள் 22, 23).[1]

தீர்ப்பிடக்கூடாது என்ற பவுலின் புத்திமதியைச் சிலர், நாம் மற்றவர்கள் போதிப்பது என்ன என்பது பற்றி ஒருக்காலும் அறைகூவல் விடக்கூடாது, நாம் எந்த மற்றும் எல்லாக் கண்ணோட்டக் கருத்துக்கள் பற்றியும் சகிப்புத்தன்மை கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதாக எடுத்துக்கொள்கின்றனர். 15:7ல் “நீங்களும் ஒருவரையொருவர் *ஏற்றுக்கொள்ளுங்கள்*” (என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறிய அதே பவுல், 16:17ல் “நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களை ... *விட்டு விலகவேண்டுமென்றும்*” கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). பவுல், சில சகோதரர்களை “ஏற்றுக்கொள்ள” வேண்டும் என்றும் மற்றவர்களை “விட்டு விலக” வேண்டும் என்றும் கூறினார்.

*இந்த வேறுபாடு ஏன்? நாம் கொண்டிருக்கும் கருத்துக்களிலிருந்து மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் பிரிவினையைத் தூண்டுகிற தவறான போதனையை நாம் புறக்கணிக்க வேண்டும். நாம் இறுக்கமாகக் கட்டப்பட்ட ஒரு கயிற்றின்மீது நடந்து கொண்டிருக்கிறோம்; மாறுபட்ட கருத்துள்ளவர்கள் என்று நாம் மற்றவர்களைத் தீர்ப்பிடுதல் என்ற வலதுபக்கத்தில் விழாதிருக்கும்படி முயற்சி செய்கிறோம்; அதே வேளையில், தவறை ஏற்றுக்கொண்டு சகித்துக்கொள்ளுதல் என்ற இடது பக்கத்திலும் விழாதிருக்கும்படி நாம் எச்சரிக்கையாக இருக்கிறோம்.*

*ரோமர் 14:1-15:13 வசனப்பகுதியானது கருத்தின் விஷயங்களைப் பற்றியதாக உள்ளது என்பதை நான் மீண்டும் வலியுறுத்த அனுமதியுங்கள்.*[2] *இந்த விஷயங்களைப் பொறுத்தமட்டில் பவுல், "இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக" என்று கூறினார். நமது தற்போதய வசனப்பகுதியில் அவர், நாம் ஒருவரையொருவர் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருக்க வேண்டியது ஏன் என்பதற்கு குறைந்தபட்சம் நான்கு காரணங்களைக் கொடுத்தார்.*

## ஏனென்றால் நாம் யாவரும் தேவனை மகிமைப்படுத்துகிறோம் (14:5, 6)

### கருத்துவேறுபடுதலின் விஷயம் (வசனம் 5அ)

*2 மற்றும் 3ம் வசனங்களில், பவுல் மாம்சம் புசித்தல் அல்லது புசியாதிருத்தல் பற்றிய விஷயத்தை அறிமுகப்படுத்தினார். 5ம் வசனத்தில் அவர், கருத்துக்கள் மாறுபடுதலின் இரண்டாவது உதாரணம் ஒன்றைக் குறிப்பிட்டார். இந்தச் சிந்தனையானது, "ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்" என்று தொடங்குகிறது (வசனம் 5அ). "ஒரு நாளை மற்றொருநாளிலும் விசேஷமாக" எண்ணுகிறவர், ஓய்வுநாளையும் மற்ற பரிசுத்த நாட்களையும் கடைப்பிடிக்கும்படியான பழக்கத்தில் வளர்க்கப்பட்டிருந்த யூதக்கிறிஸ்தவரே என்று பொதுவாக யூகிக்கப்படுகிறது. இருப்பினும், புறஜாதியாரும் விசேஷித்த நாட்களைக் கொண்டிருந்தனர். விளக்கம் மற்றும் நடைமுறைப்பயன்பாடு ஆகியவற்றில் உதவுவதற்கு நான் யூதக்கிறிஸ்தவர்கள் மற்றும் ஓய்வுநாள் என்பவற்றை மேம்போக்காகப் பயன்படுத்துவேன், ஆனால் பவுல் தமது சிந்தையில் (யூதர்களையா அல்லது புறஜாதியார்களையா) யாரைக் கொண்டிருந்தார் என்பது பற்றி நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள இயலாது என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்.*

*நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதிலும் ஓய்வுநாளைக் கைக்கொண்டிருந்த யூதர் என்பதாக உங்களைப் பற்றிக் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள், யூதத்துவப் பிரமாணம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றின்படி, ஏழாம்நாள் பற்றிய செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை என்ற திரளான கட்டளைகளை மனச்சாட்சியின்படி கைக்கொண்டிருந்தீர்கள். பின்பு நீங்கள் ஒரு கிறிஸ்தவரானீர்கள். நீங்கள் இப்போது உங்கள் சக கிறிஸ்தவர்களுடன் ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள்தோறும் ஆராதித்துக்கொண்டிருந்தாலும், பல*

பத்தாண்டுகளாக நீங்கள் கைக்கொண்டு வந்த ஓய்வுநாள் ஆசரிப்பை உங்கள் மனதிலிருந்து அகற்றுதல் என்பது கடினமாக இருக்காதா? ஏழாம் நாள் காலையில் விழித்தெழும்போது நீங்கள் எவ்வகையான உணர்வைக் கொண்டிருப்பீர்கள்? அது "இன்னும் பிரிதொரு நாள்" என்று மாத்திரம் நீங்கள் நினைப்பீர்களா? ஒரு யூதக்கிறிஸ்தவர், "ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷமாக எண்ணுகிறது" எவ்வாறு என்று காண்பது சுலபமாக உள்ளது.

மற்றவர்கள் "எல்லா நாட்களையும் சரியாக" எண்ணுகின்றனர். அவர்கள், பழைய உடன்படிக்கையின் சடங்குகளும் சடங்காச்சாரங்களும் நீக்கப்பட்டிருந்தன, "சிலுவையின்மேல் ... ஆணியடிக்கப்பட்டன" (எபேசியர் 2:15; கொலோசெயர் 2:14) என்று புரிந்துகொண்டனர். ஓய்வுநாளைக் கடைப்பிடிக்காது இருப்பதற்காக எவரொருவரும் தீர்ப்பிடப்பட (கண்டனம்பண்ணப்பட)க் கூடாதிருந்தது (கொலோசெயர் 2:16).

ரோமர் 14ல் பவுல், இந்தக் குறிப்பிட்ட விஷயத்தின்மீதான ஒரு நிலைப்பாட்டை "பலவீனமானது" என்றும் இன்னொன்றை "பலமுள்ளது" என்றும் பெயரிடவில்லை, ஆனால் கலாத்தியர் 4:9-11ல் அவர், நாட்களைக் கைக்கொள்வதற்காகச் சிலரைக் கடுமையாகக் கண்டனம் செய்தார். ஆகவே, இந்தக் கேள்வியின்மீது, நாட்களை ஆசரிப்பவர் "பலவீனமான" சகோதரராக இருக்கையில் ஆசரிக்காதவர் "பலமான" சகோதரராயிருந்தார் என்று நாம் யூகிக்கலாம்.

கலாத்தியாவிலிருந்த கிறிஸ்தவர்கள் நாட்களைக் கடைப்பிடித்ததற்கு பலத்த எதிர்ப்புத் தெரிவித்துப் பேசிய பவுல், ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்கள், நாட்களைக் கடைப்பிடித்தவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியது ஏன் என்று சிலர் வியப்படைகின்றனர். கலாத்தியா நாட்டில் (யூதர்களின் பரிசுத்த நாட்கள் உட்பட) மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுதல் இரட்சிப்பிற்கான முன்நிபந்தனையாக இருந்ததாகப் போதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஒருவேளை ரோமாபுரியில் விசேஷமாக எண்ணப்பட்ட நாள் என்பது மற்றவர்கள் மீது அதை நிர்ப்பந்திக்கும் முயற்சி எதுவும் இல்லாத, தனிப்பட்ட உறுதிப்பாட்டின் விஷயமாகச் சிலரால் கைக்கொள்ளப்பட்டிருக்கலாம்.

இந்த விஷயத்தின்மீது "பலத்த" சகோதரர்களின் நிலைப்பாடு பற்றி மற்றும் ஒன்றிரண்டு வார்த்தைகள் கூறப்பட வேண்டியுள்ளது. NASB வேதாகமம், அவர் "ஒவ்வொரு நாளையும் ஒன்றுபோல" எண்ணினார் என்று கூறுகிறது. இவ்வார்த்தை அமைப்பு, அவர் ஒவ்வொரு நாளையும் *சாதாரணமானதாகக்* கருதினார், அதாவது அவர் எந்த ஒரு நாளும் விசேஷித்த நாள் *இல்லை* என்று கருதினார் என்ற மனப்பதிவை விட்டுச் செல்லலாம். ஒருவேளை நாம், மொழி பெயர்ப்பாளர்களால் சேர்க்கப்பட்ட, "ஒன்றுபோல" என்ற வார்த்தையை விட்டுவிட்டால், அது நமது புரிந்துகொள்ளுதலுக்கு உதவுவதாக இருக்கும். இது "ஒவ்வொரு நாளையும் எண்ணுகிறான்" என்பதில் நம்மை விட்டுச் செல்லுகிறது. "எண்ணுதல்" என்பது இவ்விஷயத்தில் "அங்கீகரிக்க, உயர்வாக மதிக்க" என்று அர்த்தப்படுகிற *krino* என்பதிலிருந்து வந்துள்ளது.[3] ரோமர் 14:4ல், "*ஒவ்வொரு* நாளும் ... பரிசுத்தமானது என்ற வகையில் எண்ணப்படுகிறது" என்பதே இதன் அர்த்தமாக உள்ளது.[4]

யாரேனும் ஒருவர், "ஆனால் நான், வாரத்தின் முதல்நாள் கிறிஸ்தவர்களின்

பரிசுத்த நாள் என்றல்லவா நினைத்தேன்" என்று கூறலாம். தேவன் வாரத்தின் முதல்நாளை ஆராதனைக்கான விசேஷித்த நாளாக ஒதுக்கி வைத்தார் என்பது உண்மையே[5]; அதுவே நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கையில், "அப்பம் பிட்க" ஒன்றுகூடும் நாளாக உள்ளது (நடபடிகள் 20:7).[6] இருந்தபோதிலும், வாரத்தின் முதல்நாள் மட்டுமே வாரத்தில் ஒரே பரிசுத்த நாள் என்று நாம் நினைக்கக்கூடாது. ஒவ்வொருநாளுமே கர்த்தருக்கென்று பரிசுத்தமாக்கப்பட (தனியே ஒதுக்கிவைக்கப்பட) வேண்டும். திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரையுள்ளவை நமக்குப் "பரிசுத்த நாட்களாக" இருப்பதில்லை என்றால், ஞாயிற்றுக்கிழமை அப்படிப்போல் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

**தனிப்பட்ட உறுதிப்பாடு (வசனம் 5ஆ)**

அது நம்மை, கருத்தின் விஷயங்கள் பற்றிய ஒரு முக்கியமான கூற்றிற்குக் கொண்டுவருகிறது: "அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனா யிருக்கக்கடவன்" (வசனம் 5ஆ). "முழு நிச்சயத்தை" என்பது "முழு அளவில்" என்று அர்த்தப்படுகிற *plerophoreo* என்ற கூட்டு வார்த்தையிலிருந்து வந்துள்ளது (*pleros* ["முழு"] கூட்டல் *phero* ["சுமக்க"]).[7] ரோமர் 4:21ல் இவ்வார்த்தை "முழு நிச்சயமாய் நம்பி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. KJV வேதாகமத்தில் 14:5ம் வசனம், "fully persuaded" என்றுள்ளது. NIrV வேதாகமம், "Each person should be absolutely sure in his own mind" என்று கூறுகிறது.

ஒரு குறிப்பிட்ட விஷயமானது கருத்தின் வட்டாரத்தில் உள்ளது என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால், அதைக் குறித்து அவர்கள் அக்கறைகொண்டிருக்கத் தேவையில்லை என்று சிலர் யூகிக்கின்றனர். விஷயம் இப்படியிருப்பதில்லை என்று பவுல் சுட்டிக்காண்பித்தார். எந்த ஒருவிஷயத்தைக் குறித்தும் நாம், சிந்தித்து, படித்து, ஜெபித்து மற்றும் நமது சொந்தச் சிந்தையை ஏற்படுத்த வேண்டியதாக உள்ளது. அந்த விஷயத்தில் *நமக்குத்* தேவனுடைய சித்தம் குறித்து நாம் "முழு நிச்சயம் உடையவர்களாக" இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. அது கருத்தின் வட்டாரத்திலிருந்தால், நாம் மற்றவர்களின் மீது நமது முடிவுகளைத் திணிக்கக்கூடாது; ஆனால் கர்த்தரைக் கனப்படுத்து தலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வை வாழ்வதற்குத் தனிப்பட்ட உறுதிப் பாடுகள் வலிவார்ந்தவைகளாக உள்ளன.

முந்திய பாடம் ஒன்றில், நாம் கிறிஸ்தவர்கள் காவலர்களாக அல்லது போர்வீரர்களாக பணிபுரியலாமா கூடாதா என்ற பிரச்சனையை எழுப்பினோம். பல இடங்களில் இது கருத்தின் வட்டாரத்தில் வைக்கப்பட்டுள்ளது,[8] ஆனால் இது, இந்த விஷயம் முக்கியமற்றது என்றோ அல்லது இது இவ்விஷயம் பற்றி நீங்கள் நம்புவது என்ன என்பது எவ்வித வேறுபாட்டையும் ஏற்படுத்துவ தில்லை என்றோ அர்த்தப்படுத்துவதில்லை. நீங்கள் வாழும் எப்பகுதியிலும் மேலோங்கியிருக்கும் கருத்தைக் கேள்வியெதுவுமின்றி ஒப்புக்கொள்ளாதீர்கள். மாறாக, நீங்கள் ஏற்புடையதாக கருதும் புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் எல்லாவற்றையும் படியுங்கள். உங்கள் சொந்த சிந்தையில் நீங்கள் "முழு நிச்சயம்" கொண்டவராகும் வரையில் படியுங்கள் மற்றும் ஜெபியுங்கள். பின்பு உங்கள் உறுதிப்பாட்டிற்கு உண்மையாக நிலைத்திருங்கள்.

*தெய்வீக நோக்கம் (வசனம் 6)*

*அதே வேளையில், இந்த விஷயத்தின்மீதோ அல்லது கருத்தின் விஷயம் பற்றிய பிறவற்றின் மீதோ உங்களுடன் கருத்து வேறுபடுபவர்களை மனச்சாட்சியின்படி தீர்த்தலையோ அல்லது கண்டனம் பண்ணுதலையோ செய்யாதிருங்கள். ஏன்? 6ம் வசனமானது, நாம் ஏன் ஒரு சகோதரரை தீர்ப்பிடக்கூடாது என்பதற்கு நமது வேதவசனப்பகுதியில் முதல் காரணத்தை நமக்குத் தருகிறது: ஏனென்றால் நாம் இருவருமே கர்த்தரை மகிமைப்படுத்தப் பிரயாசப்படுகிறோம். பவுல், "நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளுகிறான்" என்று கூறினார் (வசனம் 6அ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் அதை தமது சொந்த பிரயோஜனத்திற்காக அல்ல, ஆனால் கர்த்தருக்குப் பிரயோஜனமுண்டாகவே செய்கிறார். JB வேதாகமம், அவர் "கர்த்தருடைய கனத்திற்காகவே அவ்வாறு செய்கிறார்" என்று கூறுகிறது. இது, நாட்களை விசேஷித்துக் கொள்கிறவர் தமது சிந்தையில் தேவனைப்பற்றிய இந்த நோக்கம் கொண்டிருக்கிறார் என்று யூகிக்கிறது. விஷயம் எப்போதுமே இப்படியிராதிருக்க லாம், ஆனால் அன்பு என்பது எப்போதுமே மிகச் சிறந்தவற்றையே யூகிக்க முயற்சி செய்கிறது.[9]*

*கிரேக்க வசனம், நாட்களை விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறவரைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை; அதற்குப் பதிலாகப் பவுல், மாம்சம் புசித்தல் அல்லது புசியாதிருத்தல் என்ற தமது முதன்மை உதாரணத்திற்குக் கடந்து சென்றார். இருப்பினும், நாம் நாட்களை விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறவரும்கூட தாம் செய்யும்படி தேர்ந்துகொண்டதை "கர்த்தருக்கென்றே" செய்கிறார் என்ற கருத்தை சந்தர்ப்பப்பொருளிலிருந்து நாம் சேகரிக்க முடியும்.[10]*

*6ம் வசனத்தின் பிற்பகுதியில், பவுல் இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்திய உதாரணத்திற்குத் திரும்பினார். அவர் இந்த விவரிப்பைத் தமது கலந்துரையாடலின் எஞ்சிய பகுதி முழுவதிலும் பயன்படுத்தத் தொடர்ந்தார் (காண்க வசனங்கள் 15, 17, 20, 21, 23): "[மாம்சம்] புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று [அவரைக் கனப்படுத்த] புசிக்கிறான்; [மாம்சம்] புசியாதிருக்கிறவனும்[11] கர்த்தருக்கென்று (மாம்சம்) புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான்" (வசனம் 6ஆ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஒரு சகோதரர் இரவு உணவிற்காக பொறித்த இறைச்சியும் உருளைக்கிழங்குகளையும் கொண்டிருக்கும்போது, இன்னொரு சகோதரர் சோள ரொட்டி மற்றும் பீன்ஸ்களைக் கொண்டிருக்கிறார்[12]; ஆனால் இருவருமே தங்கள் உணவிற்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துகின்றனர். இருவருமே தேவனை மகிமைப்படுத்துகின்றனர், மற்றும் இருவருமே தேவனைக் கனப்படுத்தப் பிரயாசப்படுகின்றனர். பின்பு ஏன், அவர்கள் இருவரும் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிட வேண்டும்?*

*"கர்த்தர்" என்பதே 6ம் வசனத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. இந்தச் சொற்றொடர் இவ்வசனத்தில் நான்கு முறை தோன்றுகிறது. கர்த்தர் மீது நமது கவனக்குவிப்பு இருக்க வேண்டியது அவசியமாகிறது. அவரை மகிமைப்படுத்துதல், அவரைக் கனப்படுத்துதல் மற்றும் அவரைப் பிரியப்படுத் துதல் ஆகியவை, நாம் எவற்றைப் புசிக்கக்கூடும் அல்லது புசிக்கக்கூடாது என்ற கருத்துக்களைக் காட்டிலும் முக்கியமானவைகளாக உள்ளன.*

# ஏனென்றால் நாம் யாவரும் கர்த்தருக்குரியவர்களாக இருக்கிறோம் *(14:7-9)*

***எல்லாக்கிறிஸ்தவர்களும் கர்த்தருக்குரியவர்கள் (வசனங்கள் 7-9)***

மற்ற கிறிஸ்தவர்களைத் தீர்ப்பிடாதிருக்க வேண்டும் என்பதற்கு இரண்டாவது காரணம் 7 முதல் 9 வரையுள்ள வசனங்களில் காணப்படுகிறது. *நாம் யாவரும் கர்த்தருக்கே உரியவர்கள்* என்பதால் நாம் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடக்கூடாது.

7ம் வசனம் பலருக்கு நன்கு பழக்கமானதாக உள்ளது: "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை." KJV வேதாகமத்தில் "For none of us liveth to himself, and no man dieth to himself" என்றுள்ளது. நம்மை மனிதகுலத்தின் எஞ்சிய பகுதியிலிருந்து ஒருக்காலும் நாம் தனிமைப்படுத்திக்கொள்ள இயலாது, நன்மைக்காவது தீமைக்காவது நாம் ஒருவர் பிறர் மீது செல்வாக்குச் செலுத்துகிறோம் என்பதைப் போதிக்க KJV சொற்றொடராக்கம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது.[13] அது ஒரு உண்மைக்கூற்றாக உள்ளது, ஆனால் அனேகமாக, இது [இவ்விடத்தில்] பவுல் கொடுக்க நோக்கங்கொண்ட முதன்மைச் சிந்தனையாக இருப்பதில்லை. "இதற்கு மாறாக, அவரது சிந்தனையானது வாழ்விலோ அல்லது மரணத்திலோ நாம் செய்கிறவை யாவையும் தேவனுக்கு முன்பாக உள்ளன என்ற உண்மையிலிருந்து நாம் தப்பிக்க முடியாது என்பதாக உள்ளது."[14]

7ம் வசனத்தை மீண்டும் கண்ணோக்கி, அது 8ம் வசனத்துடன் எவ்வாறு பிணைக்கப்படுகிறது என்பதைக் காணுங்கள்:[15] "நம்மில் ஒருவனும் தனக்கென்று[16] பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" (வசனங்கள் 7, 8). AB வேதாகமம் 7ம் வசனத்தைப் பின்வருமாறு விரித்துரைக்கிறது: "None of us lives to himself [but to the Lord], and none of us dies to himself [but to the Lord ...]." "நாம்" என்பது "கிறிஸ்தவர்களாகிய நாம்" என்று அர்த்தப்படுகிறது. ஒரு கிறிஸ்தவர் இனி தமக்குரியவரல்ல; மாறாக, அவர் "கர்த்தருடைவராக" இருக்கிறார் என்பதே, 7 மற்றும் 8 ஆகிய இருவசனங்களிலும், பவுலின் கருத்தாக இருந்தது.

*வாழ்வு* மற்றும் *மரணம்* ஆகியவற்றைப் பற்றிய பவுலின் குறிப்பு அனேகமாக, ஒரு தனிநபரின் முழு இருப்பையும் சூழ்ந்திருக்க நோக்கம் கொண்டிருக்கலாம். J. B. பிலிப்ஸ் என்பவர் 8ம் வசனத்தை பின்வருமாறு பொழிப்புரை செய்தார்: "At every turn life links us to God, and when we die we come face to face with him. In life or death we are in the hands of God." ("ஒவ்வொரு திருப்பத்திலும் வாழ்வு தேவனுடன் நம்மைப் பிணைக்கிறது, மற்றும் நாம் மரிக்கும்போது அவரை முகமுகமாய் எதிர்கொள்கிறோம். வாழ்விலாயினும் மரணத்திலாயினும், நாம் தேவனுடைய கரங்களில் இருக்கிறோம்.")

பவுல், வாழ்வு மற்றும் மரணம் பற்றிய தமது உருவகத்தை 9ம் வசனத்தில் தொடர்ந்தார்: "கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும்பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்." MSG

*வேதாகமத்தில், “அதனால்தான் இயேசு பிழைத்தும் மரித்தும் பின்பு மீண்டும் பிழைத்துமிருக்கிறார்: அதனால் அவர் வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் முழு எல்லையிலும் நமது எஜமானராக இருக்க முடிகிறது. …” என்றுள்ளது.*

### ஆகையால் நாம் தீர்ப்பிடக்கூடாது

*கர்த்தர் மீதான, தொடர்ந்த வலியுறுத்தத்தை நீங்கள் கவனித்தீர்களா? “கர்த்தர்” என்ற சொற்றொடர் 7 முதல் 9 வரை வசனப்பகுதியில் நான்குமுறை தோன்றுகிறது. இந்த வசனங்களிலிருந்து பல நடைமுறை பயன்பாடுகள் ஏற்படுத்தப்பட முடியும். நாம் கர்த்தருக்குரியவர்களாக இருப்பதால், நாம் நம்மையே பிரியப்படுத்தும்படி வாழக்கூடாது, ஆனால் அவரைப் பிரியப்படுத்தும்படி வாழவேண்டும்; நாம் வாழ்ந்தாலும் மரித்தாலும், நமது சிந்தனைகள் அவரை மையங்கொண்டிருக்க வேண்டும் (காண்க பிலிப்பியர் 1:21-23). இருப்பினும், நாம் ஏன் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடக்கூடாது என்ற கருத்தின் மீதே இன்னமும் பவுலின் கவனக்குவிப்பு இருந்தது. JB வேதாகமம் பின்வரும் கடிந்துகொள்ளுதலுக்கு 7, 8 மற்றும் 9ம் வசனங்களைப் பிணைக்கிறது: “இது (சற்றுமுன்கூறப்பட்ட விஷயமானது) நீங்கள் ஏன் ஒரு சகோதரர்மீது ஒருக்காலும் தீர்ப்பிடக்கூடாது என்பதற்கானதாகவும் உள்ளது” (வசனம் 10அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

*கிறிஸ்தவர் கர்த்தருக்குரியவராக இருக்கிறார் என்ற உண்மையானது பின்வருவன போன்ற கேள்விகளைத் தூண்டவேண்டும்: “ஒரு சகோதரனைக் கர்த்தர் தமது சொந்தமென்று ஏற்றுக்கொண்டிருக்கிறபடியால், நாம் ஏன் அவரைத் தீர்ப்பிடுகிறோம்?”; “நாமும் ஏன் அவரை ஏற்றுக்கொள்வதில்லை?” பவுல், “மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி. …” என்று கூறிய 4ம் வசனம் நமக்கு நினைவூட்டப்படுகிறது. இருப்பினும், உருவகமானது சற்றே மாற்றப்பட்டுள்ளது. இவ்விடத்தில், ஒரு நபர் இனியும் வேறொருவரின் வேலைக்காரரை விமர்சனம் செய்வதில்லை. மாறாக, எஜமானரின் வீட்டில் உள்ள ஒரு வேலைக்காரன் சக வேலைக்காரனைத் தீர்ப்பிடுவதை நாம் காண்கிறோம். எவ்வளவு துணிச்சல்!*

## ஏனென்றால் நாம் சகோதரர்களாக இருக்கிறோம் (14:10அ)

### நாம் குடும்பமாக இருக்கிறோம்

*அடுத்த மூன்று வசனங்கள் (10 முதல் 12 வரை), மேலாதிக்கம் செலுத்தும் ஒரு சிந்தனையைக் கொண்ட ஒரே அலகாக உள்ளன; 10ம் வசனத்தின் முதல்பகுதி அந்த சிந்தனைக்குள் வழிநடத்துகிறது. இருப்பினும், நாம் தனியே ஆராய்ந்து பார்க்க நான் விரும்புமளவுக்கு மிகவும் முக்கியமான ஒரு சொற்றொடரைப் பவுல் பயன்படுத்தினார்: “சகோதரன்.” நாம் கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாக சகோதரிகளாக இருப்பதால் நாம் இனியும் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடக்கூடாது.*[17]

*பவுல் “இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று*

*தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன?" என்று கேட்டார் (வசனம் 10அ). முதலாவது கேள்வி "பலவீனமான" சகோதரன்மீது இலக்கு வைக்கப்பட்டிருக்கலாம் (காண்க வசனங்கள் 2, 3): "நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன?" இரண்டாவது கேள்வி "பலமான" சகோதரனை நோக்கிக் கேட்கப்பட்டிருக்கலாம் (காண்க வசனம் 3): "நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன?" இவ்விரு கேள்விகளுமே 4ம் வசனத்தில் கேட்கப்பட்ட பின்வரும் கேள்வியின் மனோபாவத்தை எதிரொலிக்கின்றன: "[உன் சகோதரனைக்] குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்?" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இருப்பினும், 10ம் வசனத்தில் கேட்கப்பட்ட கேள்வியில் குறிப்பிடத்தக்க ஒரு கூடுதல் வார்த்தை உள்ளது: "சகோதரன்" என்ற வார்த்தை. (இந்த நிருபம் முழுவதிலும் உள்ளதுபோல், "சகோதரன்" என்ற வார்த்தையானது கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஆகிய யாவரையும் குறிப்பதற்குப் பொதுப்பால் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.) நாம் ஒரு குடும்பமாக இருக்கிறோம் என்பதைப் பவுல் தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார்!*

**நாம் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடக்கூடாது**

நாம் குடும்பமாக இருப்பதால், நாம் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடக்கூடாது. நம்மில் பெரும்பான்மையானவர்கள், குடும்பம் என்று வரும்போது சகிப்புத்தன்மையுடன் இருக்க மனவிருப்பமாக இருக்கிறோம். நீங்கள் கடைசியாகக் கலந்துகொண்ட பெரிய குடும்பக்கூடுகையைப் பின்னோக்கி நினைத்துப்பாருங்கள்.[18] ஒருவேளை ஹோமர் மாமா அங்கு வாரப்படாத தமது தலை மற்றும் எரிச்சல் மூட்டும் பழக்கங்கள் ஆகியவற்றுடன் அங்கிருக்கலாம். ஒருவேளை மேபெல் அத்தை அங்கு கலந்துகொண்டிருக்கலாம் - மேபெல் அத்தை, மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தினாலும்கூட, தனது மனதிலிருப்பதை எப்போதும் பேசிக்கொண்டிருக்கலாம். ஒருவேளை, சீர்கேடான ஒன்றுவிட்ட சகோதரர்கள் அங்கிருக்கலாம், அவர்கள் தங்கள் வாழ்வை மாற்றிக் கொள்வார்கள் என்று நீங்கள் நம்பி, அவர்களுக்காக ஒவ்வொரு இரவிலும் ஜெபிக்கிறீர்கள். அவ்விடத்தில் சுற்றிக்கொண்டு உங்கள் பாட்டியை ஏறக்குறைய கீழே தள்ளிவிடுகிற முரட்டுத்தனம் கொண்ட மைத்துனர்கள் இல்லாமல் எந்த ஒரு கூடுகையும் நிறைவடையாது. பெரும்பான்மையான கூடுகைகள், சற்றே விநோதமான குடும்ப உறுப்பினர்கள் குறைந்தபட்சமாக, ஒருசிலரையாவது உள்ளடக்கியிருக்கும். இருந்தபோதிலும், உணவு உண்ணும் நேரம் வருகிறபோது, இந்த உறவினர்களும்கூட மற்ற யாவருடனும் அமர்ந்து உணவை மகிழ்வுடன் உண்ணும்படி அழைக்கப்படுகின்றனர்.

நமது பௌதீக குடும்பத்தில் நாம் இப்படிப்பட்ட வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ள மனவிருப்பமாக இருந்தால், நமது ஆவிக்குரிய குடும்பத்தில் இப்படிப் பட்டவர்களை நாம் எவ்வளவு அதிகமாக ஏற்றுக்கொள்பவர்களாக இருக்க வேண்டும்! சார்லஸ் ஸ்வின்டால் என்பவர், ரோமர் 14ல் உள்ளது ஒரு *உணவுப்* பிரச்சனையாக இருக்கவில்லை என்று கருத்துத் தெரிவித்தார். அது ஒரு *அன்பு* பிரச்சனையாக இருந்தது.[19] பேதுரு, "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று எழுதினார் (1 பேதுரு 4:8).

# ஏனென்றால் நாம் யாவரும் நியாயந்தீர்க்கப்படுவோம் (14:10ஆ-13அ)

**எல்லாரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (வசனங்கள் 10ஆ, 11)**

அது நம்மை, நாம் ஏன் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடக்கூடாது என்பதற்கான நான்காவது காரணத்திடம் கொண்டுவருகிறது: *நாம் யாவரும் கர்த்தரால் தீர்ப்பிடப்பட இருப்பதால்.* நாம் தேவனால் நியாயந்தீர்க்கப்படுவோம் என்ற உண்மை, 4ம் வசனத்தில் மறைமுகமாக உணர்த்தப்பட்டது. இவ்விடத்தில், அது வெளிப்படையாக உரைக்கப்பட்டுள்ளது: "நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய[20] நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே"[21] (வசனம் 10ஆ).

"நியாயாசனம்" என்பது குற்றம்சாட்டப்பட்டவர் முன்னால் நிறுத்தப்படும் திறந்தவெளியிலுள்ள உயர்த்தப்பட்ட மேடையாகும், இவ்வார்த்தை *bema* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[22] *Bema*வுக்கு முன்பாக நிற்கும் கைதிகள் என்ற காட்சி, பவுலின் வாசகர்களுக்குப் பொதுவான ஒரு காட்சியாக இருந்திருக்கும். பழைய கொரிந்து நகரின் சிதிலங்களை நான் பார்வையிட்டபோது, மறுகட்டுமானம் செய்யப்பட்டிருந்த ஒரு *bema*வை நான் கண்டேன். அதற்கு முன்பாக இருந்த ஒரு திறந்த வெளியின் மத்தியில், குற்றம்சாட்டப்பட்டவர் நிற்கவேண்டியிருந்த ஒரு சிறு தூண் இருந்தது.

பவுலின் நாட்களிலிருந்த ரோமானிய நீதிமன்றங்களின் முன்பு மனிதர்கள் நின்றது போலவே, ஒரு நாளிலே நீங்களும் நானும் நமது நித்திய தீர்ப்பைப் பெறுவதற்காகத் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம். MSG வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை அடங்கியுள்ளது: "நிறைவாக நாம் யாவரும் ... தேவனை முகமுகமாய்க் காணக்கூடிய நியாயத்தீர்ப்பினிடத்தில் அருகருகே இருந்து ... தீர்ப்பைப்பெற்று நிறைவடையப் போகிறோம்."

விஷயம் இவ்வாறே இருக்கும் என்பதற்கு நிரூபணமாகப் பவுல், ஏசாயா 45:23லிருந்து மேற்கோள் காண்பித்தார்: "அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர்[23] சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது" (வசனம் 11). ஏசாயா 45, "தேவன் சிருஷ்டிப்பில் தமது உண்மைநிலை மற்றும் வல்லமை ஆகியவற்றை விக்கிரகங்களின் வெறுமை மற்றும் இயலாத்தன்மை ஆகியவற்றுடன் நேரெதிராக ஒப்பிடுகிற" ஒரு வசனப் பகுதியாக உள்ளது.[24] இவ்வசனப்பகுதி, கர்த்தரே மெய்யான ஒரே தேவன் என்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளும் காலம் வரும் என்று மறைமுக மாக உணர்த்துகிறது. இது நாம் நியாயத்தீர்ப்பின் நாளில் அவருக்கு முன்பாக நிற்கையில் நடைபெறும்.

ஒருநாளில் நாம் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக இருக்கவேண்டும் என்பதால், நாம் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடுதல் என்பது நமக்கு எவ்வளவாக ஏற்பில்லாததாயிருக்கிறது! *Bema*வுக்கு முன்பாக நின்றுகொண்டு, நியாயத்தீர்ப்பிற்காகக் காத்திருக்கும் கைதிகளின் வரிசை ஒன்றைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். திடீரென்று, அவர்களில் ஒருவர் அந்தக் குழுவிலிருந்து மின்னல் பாய்ச்சலாக எழும்பி, *bema*வின்மீது ஏறுகிறார். "நான் இப்போது நியா யாதிபதி!" என்று அவர் சத்தமிடுகிறார். என்ன ஒரு மதியீனமான, மதியீனமான மனிதர்! போர்வீரர்கள் அம்மனிதரைத் திரும்ப அவர் நின்றிருந்த இடத்திற்கு

*இழுத்து வருகையில், அவர் மற்றவர்களை நியாயந்தீர்க்கும் பதவியில் இல்லை என்பது அவருக்குத் தெளிவாக்கப்படும்.*

**ஒவ்வொருவரும் தம்மைக்குறித்தே கணக்கொப்புவிப்பார்**
***(வசனங்கள் 12, 13அ)***

*"ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" என்று பவுல் கூறினார் (வசனம் 12). நான் உங்களைக் குறித்துக் கணக்கொப்புவிக்கப் போவதில்லை, மற்றும் நீங்கள் என்னைக் குறித்துக் கணக்கொப்புவிக்கப் போவதில்லை. "நம்மில் ஒவ்வொருவனும் <u>தன்னைக் குறித்துத்</u> தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பான்."*[25]

*இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின், திபேரியா (கலிலேயா)க் கடலருகே அவர் தமது சீஷர்களுக்குத் தரிசனமானார் (யோவான் 21). இயேசு, தம்மை மறுதலித்திருந்த பேதுருவினிடம் பேசுவதற்கு அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அந்த உரையாடலின் முடிவில், பேதுரு இயேசுவினிடத்தில், அருகே நின்று கொண்டிருந்த யோவானைக் குறித்துக் கேள்விகேட்டார்: "ஆண்டவரே, இவன் காரியம் என்ன" (வசனம் 21). இயேசு, "உனக்கென்ன, <u>நீ</u> என்னை பின்பற்றிவா" என்றார் (வசனம் 22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவதை நிறுத்திவிட்டு, என்னுடன் <u>உனது சொந்த</u> உறவுகள் பற்றிக் கவலைப்படத் தொடங்கு!" என்றார். MSG வேதாகமத்தில் ரோமர் 14:12ன் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "தேவனுக்கு முன்பாக உன் சொந்த வாழ்க்கை குறித்து கவனம் செலுத்தவே உன் கைகள் நிறைந்திருக்கின்றன."*

*பவுல் "இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக" என்று கூறினார் (வசனம் 13அ). ஆமென் ஆமென்.*

## *முடிவுரை*

*கருத்து விஷயத்தில் நாம் ஏன் "ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடக்கூடாது" என்பதற்கு நாம் நான்கு காரணங்களைக் குறிப்பிட்டோம்:*

- *ஏனென்றால் நாம் யாவருமே தேவனை மகிமைப்படுத்தப் பிரயாசப் படுகிறோம்.*
- *ஏனென்றால் நாம் யாவருமே கர்த்தருக்குரியவர்களாக இருக் கிறோம்.*
- *ஏனென்றால் நாம் கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாக இருக் கிறோம்.*
- *ஏனென்றால் நாம் யாவருமே கர்த்தரால் நியாயந்தீர்க்கப் படுவோம்.*

*இவற்றில் ஏதாவது <u>ஒன்றுகூட</u>, நாம் ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொண்டு தீர்ப்பிடுபவர்களாக இருப்பதை நிறுத்தப் போதுமானதாக இருக்க வேண்டும். இந்த <u>நான்கும்</u> நம்மை சாக்குபோக்கு எதுவுமின்றி இருக்கும்படி செய் கின்றன!*[26]

குறிப்புகள்

[1]3ம் வசனம் பற்றிய நமது கலந்துரையாடலில் குறிப்பிட்டபடி, *krino* என்பது ரோமர் 14ல் ஒரு நேர்மறைக் கருத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 5ம் வசனத்தில் "எண்ணுதல்" என்று இருமுறையும் 13ம் வசனத்தில் "தீர்மானித்தல்" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. [2]"கருத்தின் விஷயங்களில்" நான் எப்போதுமே ஒரு தகுதியைக் கூட்டுவதற்கு நிற்பதில்லை, ஆனால் பின்தொடரும் குறிப்புரைகள் யாவற்றிலும் இது புரிந்துகொள்ளப்பட வேண்டும். [3]ஹியூகோ மெக்கார்டு என்பவரின் மொழிபெயர்ப்பில், "holds every day in esteem" என்றுள்ளது. [4]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 207. (Emphasis mine.) [5]1 கொரிந்தியர் 16:1, 2ல் பவுல், கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்கள் ஆராதனைக்கென்று ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் ஒன்றுகூடுவார்கள் என்று யூகித்தார். (அவர்கள் அவ்வாறு செய்தபோது, ஒரு விசேஷ காணிக்கை சேகரிப்பை மேற்கொள்ளும்படி அவர்களுக்குப் பவுல் கூறினார்.) [6]சிலர் ரோமர் 14:5ஐ, கர்த்தருடைய பந்தியை ஞாயிற்றுக்கிழமை தவிர வேறு ஏதாவது ஒரு நாளில் கைக்கொள்வதற்குச் சாக்குப்போக்காகப் பயன்படுத்தியுள்ளனர். வாரத்தின் முதல்நாள் தவிர வேறு எந்த நாளிலாவது ஐக்கியவிருந்தில் பங்கேற்பதற்கு வேதாகமரீதியான அதிகாரத்துவம் எதுவும் இருப்பதில்லை. [7]Vine, 43. [8]உலகின் சிலபாகங்களில், காவல்துறையும் இராணுவமும், பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்துடன் சமரசம் செய்துகொண்டாலன்றி அதில் பங்கேற்க இயலாது என்று நம்பும் அளவுக்கு மிகவும் ஊழல் மலிந்தவைகளாக உள்ளன. இந்தப் பத்தியை உங்கள் பகுதியின் தேவைக்குத் தக்கபடி தழுவியமைத்துக் கொள்ளுங்கள் அல்லது இதை முற்றிலுமாக விட்டுவிடுங்கள். [9]சிலர் 1 கொரிந்தியர் 13:7ல் "சகலத்தையும் விசுவாசிக்கும்" என்ற சொற்றொடரின் மறைபொருள்களில் இதுவும் ஒன்றாகும் என்று நினைக்கின்றனர். [10]கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் நாட்களை விசேஷித்துக்கொள்ளாதவர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதால், KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில், "நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான்" என்பது கூட்டப்பட்டுள்ளது (NKJV வேதாகமத்தையும் காணவும்).

[11]சிலர், "புசியாதிருக்கிறவன்" என்பது உபவாசம் (உணவின்றி இருத்தல்) இருத்தலைக் குறிக்கிறது என்று நினைக்கின்றனர், ஆனால் "உண்ணாதிருக்கிறவன்" என்பது மாம்சம் உண்ணுதலை விலக்கி இருத்தலைக் குறிப்பதாகவே சந்தர்ப்பப்பொருள் சுட்டிக் காண்பிக்கிறது. [12]நீங்கள் வாழும் பகுதியிலுள்ள உணவுப் பழக்கவழக்கத்திற்குப் பொருந்து மாறு இந்த வாக்கியத்தை மாற்றிக்கொள்ளுங்கள். பொதுவான மாம்ச உணவுவகை ஒன்றையும் அதற்கு எதிராக காய்கறி உணவுவகை ஒன்றையும் குறிப்பிடுங்கள். (ஒருவர் இறைச்சி பிரியாணி செய்து உண்ணுகையில் இன்னொருவர் சாதமும் சாம்பாரும் உணவாகக் கொள்கிறார் என்று கூறலாம்.) [13]மற்ற பல போதகர்கள் மற்றும் பிரசங்கியார்களுடன் நானும் இவ்வசனத்தை இதைப்போன்று பயன்படுத்தியிருக்கிறேன். ரோமர் 14:7ல் JB வேதாகமத்தில், "... has its influence on others" என்று வாசிக்கப்படுகிறது. [14]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 481. [15]KJV வேதாகமத்தினால் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வசனத்தில், 7ம் வசனத்தின் முடிவில் ஒரு புள்ளி இருக்கிறது. மிகசமீபத்திய மொழிபெயர்ப்புகளால் பயன்படுத்தப் பட்ட கிரேக்க வசனத்தில் இவ்வசனத்தின் முடிவில் ஒரு அரைப்புள்ளி உள்ளது, இது 7 மற்றும் 8ம் வசனங்களை ஒன்றாகப் பிணைக்கிறது. [16]KJV வேதாகமத்தில் "for"

["... என்று"] என்பதற்குப் பதிலாக "to" ["க்கு"]என்றுள்ளது. இந்த முன்னிடைச் சொற்கள், நான்காம் வேற்றுமை உருபிலான வார்த்தைகளின் தொடர் ஒன்றுடன் செல்வதற்கு மொழிபெயர்ப்பாளர்களால் தரப்பட்டன. "For" என்பது சந்தர்ப்பப்பொருளில் "to" என்பதைக் காட்டிலும் சிறப்பாகப் பொருந்துவதாகக் காணப்படுகிறது. [17]பவுல் இந்தச் சிந்தனையை 13 மற்றும் 15ம் வசனங்களில் விரித்துரைத்தார். [18]நான் இந்தப் பத்தியில் நகைச்சுவையின் தொடுகை ஒன்றை உட்செருகியுள்ளேன். குடும்பங்களும் சமூகங்களும் தாங்கள் சகித்துக்கொள்ளும் மற்றும் சகித்துக்கொள்ளாத விஷயங்களில் வேறுபடுகின்றதால், நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவரின் அனுபவங்களைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பத்தியைத் தழுவியமைப்பது அவசியமாயிருக்கும். [19]Charles R. Swindoll, *The Grace Awakening* (Anaheim, Calif.: Insight for Living, 1990), 158. (Emphasis mine.) [20]ரோமர் 14:10ல் KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில் "தேவன்" என்பதற்குப் பதிலாக "கிறிஸ்து" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது. "தேவனுடைய நியாயாசனம்" மற்றும் "கிறிஸ்துவினுடைய நியாயாசனம்" ஆகியவைகளுக்கிடையில் வேறுபாடு எதுவுமில்லை. வேறொரு இடத்தில் பவுல், "*கிறிஸ்துவின்* நியாயாசனம்" என்று குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 5:10; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ரோமர் 2:16ல் பவுல், "தேவன் இயேசுகிறிஸ்துவைக் *கொண்டு* ... மனுஷருக்கு ... நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே ..." என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

[21]4ம் வசனத்தில் "நிற்குதல்" என்பது "விழாதிருத்தல்" (அதாவது, தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுதல்) என்று அர்த்தப்படுகிறது, மற்றும் அது இவ்விடத்திலும் அதே அர்த்தம் கொண்டிருக்கலாம். ஆயினும், 10ம் வசனத்தில் தொடரும் சந்தர்ப்பப்பொருளின் வெளிச்சத்தில், இது தீர்ப்பை வெளியிட இருக்கும் ஒரு நியாயாதிபதியின் பிரசன்னத்தில் இருத்தல் என்பதை மாத்திரம் குறிக்க வாய்ப்புள்ளது. [22]Vine, 337-38. [23]இந்த மேற்கோளின் தொடக்க வார்த்தைகள் ஏசாயா 49:18லிருந்து வந்திருக்கலாம். [24]Larry Deason, *"The Righteousness of God"*: *An In-depth Study of Romans,* rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 308. [25]12ம் வசனத்தில் மற்ற மறைவான கருத்துக்கள் இருக்கலாம்: (1) நாம் மற்றவர்களுக்கு அல்ல, ஆனால் தேவனுக்கே கணக்கொப்புவிப்போம்; (2) நாம் தீர்ப்பிடுதலினால் குற்றப்பட்டிருந்தால், அதற்கு நாம் கணக்கொப்புவிக்க வேண்டியிருக்கும் (காண்க மத்தேயு 7:1, 2). [26]ரோமர் 14ன் எஞ்சியபகுதி பற்றிய நமது படிப்பில் நாம் இன்னும் அதிக காரணங்களைக் காண்போம்.